1989 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, பெண் கைதிகள் எவ்வளவு என்ற விவரம் இப்போது இல்லை. ஆனால் ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்ட 120 பேரில் ஒரே ஒரு பெண்தான் இருந்தார். அதைப் பொறுத்தவரையில் பாராட்ட வேண்டியதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 210 முதல் 213 முடிய, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

பஸ் பயணிகளுக்கு காப்பீட்டு முறை.

214—(*வினா எண். 1748) திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களிலும், அரசு பஸ்களிலும் பயணம் செய்யும் பயணிகள் விபத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ''காப்பீட்டு'' முறை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இத்தகைய காப்பீட்டு முறை கொண்டுவருவது அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

அதிக அளவு இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் தனி நியாய விலைக் கடைகள்.

215—(*வினா எண். 3501) டாக்டர் க.காஞ்சனா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக அளவு இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் தனி நியாய விலைக் கடைகள் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1989 மே 5

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன வியப்பு இது? எப்படி அமைச்சர் அவர்களால் இப்படி ஒரு நிர்தாட்சண்யமான பதிலை எனக்கு அளிக்க முடிகிறது? மூன்று மாதங்களாக எழுதி, எழுதி இன்றைக்குத் தான் முதல் கேள்வி வந்திருக்கிறது. பொன் விழா நாளில் சென்டிமென்டலாகப் பார்த்தால்கூட, சரிப்பட்டு வரவில்லை. என்னுடைய தொகுதியில் வேப்பனப்பள்ளி பகுதியில் முழுக்க, முழுக்க இஸ்லாமியப் பெருங்குடி மக்களே வாழுகின்ற ஊர்கள் வரிசையாக இருக்கின்றன. சாலை வசதிகளும் இல்லாமல், பேருந்து வசதியும் இல்லாமல் எங்கள் கோஷாப் பெண்மணிகள் 3, 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று மற்ற ஊரிலே அமைந்திருக்கக்கூடிய கடைகளில் க்யூவில் நிற்பதற்கு மிகவும் சங்கடப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடைத் திட்டம் என்று இப்போதே அமலில் இருக்கிறது. எங்கேயாவது இஸ்லாமியப் பெருமக்கள் அதிகமாக வாழக் கூடிய ஒரு கிராமம் இருக்குமானால் பெரும்பாலும் அந்தக் கிராமம்—ஒரு ரெவினியூ வில்லேஜ் என்ற அடிப்படையில், ஒரு வருவாய் கிராமமாகத்தான் இருக்கும். அங்கே அவர்களுக்கென்று தனியாக, அந்தக் கிராமத்திற்கு ஒரு ரேஷன் கடை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, முதல் கேள்வி என்ற காரணத்தினாலே அவர்கள் விரும்புவதையெல்லாம் அரசு செய்ய முடியாது. இருந்தாலும் கூட, கோஷாப் பெண்களைப் பற்றிச் சொன்னார்கள். கோஷாப் பெண்கள் ரேஷன் கடையிலே போய் அரிசி வாங்குகிற நேரத்தில் அவர்கள் பெண்கள் நிற்கின்ற அந்த க்யூவில் நின்றால் அந்தக் கோஷாப் பெண்களுக்கென்று இருக்கக் கூடிய தனி உரிமை எழாமல் போய்விடும். ஏன் என்றால் ஆண்கள் தனி வரிசையாகத்தான் நிற்கிறார்கள்; பெண்கள் தனி வரிசையாக நிற்கிறார்கள். அப்படி பெண்கள் நிற்கின்ற வரிசையில் கோஷாப் பெண்களும் நின்று விட்டால் பிரச்சினை வராது.

1989 மே 5]

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சருடைய மனம் இளகவில்லை, இருந்தாலும் பரவாயில்லை. பிற் காலத்திலாவது இதுபற்றி யோசிப்பார்களானால் நான் மிகவும் நன்றி உடையவளாக இருப்பேன். தனியாகக் கடைகள் அமைத்து இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள், இஸ்லாமிய மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளில். அப்படி அமைந்து இருக்கின்ற அந்தக் கடைகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள பெண்களுக்கு 30 சதவீத வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பணி புரிய முன் வருகின்ற தகுதியுள்ள இஸ்லாமிய சகோதரிகளுக்கு முன்னுரிமை கொடுப்பார்களா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விரும்புவது போல் எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த அந்த 30 சதவீத இடம் பெண்களுக்கு ஒதுக்கப் படுகின்ற திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகளில் எங்கெங்கு இடம் காலியாக இருக்கிறதோ அந்த இடங்களில் நியமிப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நியாய விலைக் கடைகளில் இந்த இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு ஆகிய நாட்களில் இலவச அரிசி வழங்கப்படுகிறது. இவைகள் எல்லாம் பொதுவான நாட்கள், எல்லோரும் திருநாளாக கொண்டாடுகின்ற பண்டிகை நாட்கள், தீபாவளிக்கு வழங்கப்படுகின்ற இலவச அரிசியைப் பிரித்து அவரவர்களுடைய விருப்பப்படி ரம்ஜான் முஸ்லீம்களுக்கும், கிருஸ்துமஸ் கிருத்துவர்களுக்கும் வழங்கலாம். தீபாவளி அன்று அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு தான் கொடுக்கப்படும் என்ற வகையில் அதை மாற்றி அமைக்க அரசு திட்டம் வைத்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் உணவு, கூட்டுறவுத் துறை மானியத்தின் போதே இந்த வினாவை இறுதியிலே எழுப்பி னார்கள். நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சில சிக்கல்கள் காரணமாக இதை அப்போது இயலாது என்று தெரிவித்து இருந்தேன். இருந்தாலும் 1990 ஆம் ஆண்டு ஜனவரி முதல் புதிய கார்டுகள் வழங்கக்கூடிய ஒரு திட்டம் அரசிடம்

இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையை பரிசீலிக்கலாமே என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் 1990 ஆம் ஆண்டு முதல் கிருஸ்துமஸ் மற்றும் ரம்ஜான் போன்ற பண்டிகைகளுக்கு தீபாவளிக்கு கொடுக்கக் கூடிய அந்த அரிசி 'ஆப்ஷன்' என்ற முறையில் இந்துக்களுக்கு தீபாவளிக்கும், கிருத்துவர்களுக்கு கிருஸ்த்துமஸ்க்கும், இஸ்லாமியர்களுக்கு ரம்ஜான் பண்டிகைக்கும் வழங்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடையும், நகராட்சியில் வட்டத்திற்கு ஒரு கடையும் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது முஸ்லீம் பெண்கள் சில கிராமங்களில் 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தூரம்—என்னுடைய தொகுதியில் கூட இருக்கிறது—போக வேண்டிய நிலை இருக்கிறது. அதை விடுத்து அருகாமையில் இருக்கிற வேறு ரெவின்யூ கிராமத்தின் கடையில் அவர்கள் கார்டுகளை இணைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை என்று தான் சொன்னேனே தவிர வட்டத்திற்கு ஒரு கடை என்று சொல்லவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த கிராமத்தினுடைய விவரங்களை அரசுக்குத் தெரிவிப்பார்களானால் அரசு அது பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சுமார் 2 ஆயிரம் குடும்ப கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை என்ற நிலை இருக்கிறது. இதனால் கடுமையான நெருக்கடிகளுக்கு, கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகின்ற காரணத்தால் 500 குடும்ப ரேஷன் அட்டைக்கு ஒரு கடை என்ற நிலையில் மாற்றி அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரேஷன் கடை தொடங்குவது என்று சொன்னால் ஆண்டு ஒன்றுக்கு 4,200 ரூபாய் அரசாங்கம் மானியமாக வழங்கவேண்டி இருக்கிறது. இப்போதே 21,134 கடைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல்— 1000- லிருந்து 1500 அட்டைகள்

வரை உள்ள கடைகள் 2,855: 1,500–லிருந்து 2,000 அட்டைகள் வரை உள்ள கடைகள் 221. 2,000த்துக்கு மேல் அட்டைகள் உள்ள கடைகள் 17 இருக்கின்றன, இருந்தாலும் 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று திறக்க முடியாது. ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்று திறப்பதற்கு அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ விலேஜுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று இருந்தாலும் ஒரு கிராமத்திலே ஏறக்குறைய 5 ஆயிரம் கார்டுகள் கூட இருக்கின்றன. அது போன்ற கடைகளைப்பிரித்து, அதாவது கிளைகளாகப் பிரித்தாவது ஆரம்பிப்பதற்கு அரசிடம் திட்டமுள்ளதா? அதே நேரத்திலே நகராட்சியிலே ஒவ்வொரு வட்டத்திலேயும் ஒரு நியாய விலைக் கடை ஆரம்பிக்க அரசிடம் திட்டமுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் கார்டுகள் உள்ள எந்த கிராமமும் இதுவரையிலே தமிழகத்திலே இல்லை. 2 ஆயிரத்திற்கும் மேலே 2,500 கார்டுகளுக்குள்ளே இருக்கக்கூடிய கடைகள்தான் 17 இருக்கின்றன. அதைப் பிரிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. என்று சொன்னேன். நகர சபைகளிலே ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு கடை என்று ஆரம்பித்தால் இன்னும் 5 ஆயிரம் கடைகள் புதியதாகத் திறக்க வேண்டியது இருக்கும். இப்போதுள்ள நிதி நெருக்கடியான சூழ்நிலையில் அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ வில்லேஜுக்கு ஒரு கடை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். வெள்ளக் கோயில் தொகுதியில் சேனாபதிபாளையம் என்ற தனி ரெவின்யூ கிராமத்திற்கு இதுவரையில் கடையே திறக்கப்படாமல் இருக்கிறது. அங்கு கடை திறப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்று சொல்கின்றபோது, ஒரே கிராமத்தில் இரண்டு கடைகளைத் திறந்து உள்ளார்கள். அதை மாற்றி, அப்படிப்பட்ட கடைகளைப் பிரித்து, வட பகுதி, தென் பகுதி என்று அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த ரெவின்யூ கிராமத்திற்கு தனியாக கடை இல்லையென்றால் அரசாங்கம் நிச்சயமாக, தனியாக ஒரு கடையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யும். ஒரு கிராமத்திலே இரண்டு கடைகள் இருக்கலாமா என்று கேட்டால் கார்டுகள் அதிகமாக

இருந்தால் ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்ற விகிதத்திலே கடைகளைத் திறக்க அரசு இப்போதே முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி மன்றத்தில் 8 கிராமங்கள் இருக்கின்றன. காலையில் 4 கிராமங்களுக்கும் மாலையில் 4 கிராமங்களுக்கும் இந்தக் கடையைத் திறக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சியிலும் குக்கிராமங்கள் 8 அல்ல, 10, 12 கூட இருக்கின்றன. அந்தக் குக்கிராமங்களுக்கெல்லாம் தனித்தனியாக கடைகளைத் திறக்கக்கூடிய உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. கா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச அரிசி வழங்குவதற்கு கிருஸ்துமஸையும் ரம்ஜானையும் தேர்ந்தெடுத்த தமிழக அரசுக்கு, சிறுபான்மை மக்கள் சார்பாக நான் நன்றி சொல்ல ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு இந்த முறை இலவச அரிசி கிடைக்கவில்லை. ஒவ்வொரு விழாவின் போதுகூட எல்லா இல்லங்களிலும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு வீட்டிலும் சாப்பாடு கொடுக்கப்படுவது உண்டு. ஆனால் இவ்வளவு பெரிய நிகழ்ச்சி நடத்துகின்ற தமிழக அரசு அந்த நகர சுத்தித் தொழிலாளர்களுடைய நிலையையும் கண்கொண்டு அவர்களுக்கும் இலவச அரிசி வழங்க முன் வருமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாத வருமானம் 300 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்ற திட்டம். நகர சுத்தித் தொழிலாளர்கள் எவ்வளவு வருமானம் பெறுகிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். எனவே 300 ரூபாய்க்குக்கீழே யார் வருமானம் பெறுகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்தத் திட்டம் அமல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தித் துறையில் வேலைவாய்ப்பு

*143—(*வினா எண். 82)* திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்தித் துறையில் 1989 தேர்தல் அறிவிப்பிற்குப் பின் ஏதேனும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதா?